ஆங்கில சொல் இலக்கணக் கூறுகள் யாவை?

what are the eight parts of speech in English?

| | |
|---|---|
| NOUN | பெயர்ச்சொல் |
| PRONOUN | மாற்றுப்பெயர் |
| ADJECTIVE | பெயர் உரிச்சொல் |
| VERB | வினைச்சொல் |
| ADVERB | வினை உரிச்சொல் |
| PREPOSITION | முன்னிடைச்சொல் |
| CONJUNCTION | இணைப்புச் சொல் |
| INTERJECTION | வியப்புச்சொல் |

இவை எட்டும் ஆங்கிலத்தில் பார்ட்ஸ் ஆப் ஸ்பீச் (Parts of Speech) என அழைக்கப்படுகிறது. எந்த ஒரு வார்த்தையை எடுத்துக் கொண்டாலும் அதில் ஒன்றோ அல்லது அதற்கும் மேற்பட்ட சொல் இலக்கணக் கூறுகளைக் கொண்டதாக இருக்கும்.

**1. பெயர்ச்சொல் » NOUN**

பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் (NOUN) ஆகும். இவை இடத்தின் பெயராகவோ, விலங்குகளின் பெயராகவோ அல்லது ஒரு மனிதனின் பெயராகவோ கொண்டிருக்கும்.

**Kannan met Senthil**

**கண்ணன் செந்திலை சந்தித்தார்**

இதில் கண்ணன் என்பதும் செந்தில் என்பதும் பெயர்ச்சொல் ஆகும்.

**Kannan met Senthil with his dog on the ground**

**கண்ணன் தனது நாயுடன் மைதானத்தில் செந்திலை சந்தித்தார்**

இதில் கண்ணன், செந்தில், நாய் மற்றும் மைதானம் ஆகியவை பெயர்ச்சொல் ஆகும்.

**2. மாற்றுப் பெயர்ச்சொல் (அ) பிரதி பெயர்ச்சொல் » PRONOUN**

ஒரு குறிப்பிட்ட இடத்தையோ, பொருளையோ, மனிதனையோ முதல் முறை குறிப்பிடும் பொழுது அது பெயர்ச்சொல்லாகவும், இரண்டாம்முறை மீண்டும் குறிப்பிடும் பொழுது அதனுடைய பெயரைக் குறிப்பிடாமல் மாறாக நின்று செயல்படும் சொல்லினை மாற்றுப் பெயர்ச்சொல் (PRONOUN) எனப்படுகிறது. உதாரணமாக

**1. Kannan met Senthil with kannan's dog on the ground.**

கண்ணன் கண்ணனுடைய நாயுடன் மைதானத்தில் செந்திலை சந்தித்தார்.

**2. Kannan met Senthil with his dog on the ground.**

கண்ணன் தனது(அவருடைய) நாயுடன் மைதானத்தில் செந்திலை சந்தித்தார்.

மேற்கண்ட முதல் உதாரணத்தில் கண்ணன் என்ற பெயர் இரு முறை குறிப்பிடுவதால் அங்கு மற்றொரு கண்ணனுடைய என்று பொருள்படுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
இரண்டாம் உதாரணத்தில் மீண்டும் கண்ணனைக் குறிப்பிட ஹிஸ்(his) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே ஹிஸ் (his) என்ற வார்த்தை கண்ணன் என்ற பெயர்ச்சொல்லுக்குப் பதிலாக குறிப்பிடப்படுவதால் அதை மாற்றுப் பெயர்ச்சொல் என்கிறோம்.

இவ்வகையான மாற்றுப்பெயர்ச்சொல் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை முறையே

| FIRST PERSON | முதலாம் நபர் (தன்மை) |
|---|---|
| I | நான் |
| WE | நாம் / நாங்கள் |
| ME | என்னை |
| MY / MINE | என்னுடைய / என்னுடையது |
| OUR / OURS | நம்முடைய (எங்களுடைய) / நம்முடையது (எங்களுடையது) |

| SECOND PERSON | இரண்டாம் நபர் (முன்னிலை) |
|---|---|
| YOU | நீ / நீங்கள் / உன்னை / உங்களை |
| YOUR | உன்னுடைய / உங்களுடைய |
| YOURS | உன்னுடையது / உங்களுடையது |

| THIRD PERSON | மூன்றாம் நபர் (படர்க்கை) |
|---|---|
| HE | அவன் |
| SHE | அவள் |
| IT | அது |
| THEY | அவர்கள் / அவைகள் |
| HIM | அவனை |
| HER | அவளை / அவளுக்கு |
| HIS | அவனுடைய |
| THEM | அவர்களை / அவைகளை |
| THEIR | அவர்களுடைய / அவைகளுடைய |
| THEIRS | அவர்களுடையது / அவைகளுடையது |
| HERS | அவளுடையது |
| ITs | அதனுடையது |

**3.பெயர் உரிச்சொல் » ADJECTIVE**

பெயர்ச் சொல்லின் குணத்தைக் குறிக்கும் சொல் பெயர் உரிச்சொல் எனப்படும். உதாரணமாக

Kamal is a bad boy -> கமல் ஒரு கெட்ட பையன்.

இதில் கமல் எப்படிப்பட்டவன் என்ற கேள்விக்கு கெட்ட என்ற கமலின் குணத்தைத் தருவதால் இது பெயர் உரிச்சொல் எனப்படும்.

| ADJECTIVE | பெயர் உரிச்சொல் | உதாரணம் |
|---|---|---|
| BAD | கெட்ட | காண்க |
| BIG | பெரிய | காண்க |
| BRAVE | தைரியமான | காண்க |
| BEST | சிறந்த | காண்க |
| BEAUTIFUL | அழகான | காண்க |
| DANGER | அபாயகரமான | காண்க |
| FAITH | நம்பிக்கையுள்ள | காண்க |
| GREAT | சிறந்த / உயர்ந்த | காண்க |
| KIND | அன்பான | காண்க |
| LAZY | சோம்பலான | காண்க |
| LITTLE | சிறிய | காண்க |
| MUCH | மிக அதிகமான | காண்க |
| MORE | மிக மிக அதிகமான | காண்க |
| SOFT | மிருதுவான | காண்க |
| SICK | நோயுள்ள | காண்க |